

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட மெரினா கடற்கரைப் பகுதியில் நீலக்கொடி சான்றிற்காக 7.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் சூழலியலை பேணும் மேம்பாட்டுப் பணிகளை நேற்று முன்தினம் (3.8.2025) பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இயக்குநர் ஏ.ஆர். ராகுல் நாத், நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளும்கட்சி துணைத்தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (3.8.2025) சென்னை – சைதாப்பேட்டை – தாடண்டர் நகரில் உள்ள, திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்களை, அவரது இல்லம் சென்று மரியாதை நிமித்தமாகச் சந்தித்து உரையாடினார். கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன், துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர்.



சென்னை கம்பன் கழகத்தின் ‘பொலிவுமிகு பொன்விழா 51 நிறைவு விழா’விற்கான அழைப்பிதழை, முகாம் அலுவலகத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் முன்னாள் ஒன்றிய அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. அவர்கள் வழங்கினார்.



கழக, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின், மாநில துணைச் செயலாளரும் – தமிழ்நாடு அரசு கலை – பண்பாட்டுத்துறையின் கவுரவ இயக்குநரும், பரத நாட்டியக் கலைஞருமான ஜாஹிர் ஹுசைன், அண்மையில் உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, தற்போது உடல் நலம் பெற்றுள்ளார். அவரை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அவரது இல்லத்திற்கு நேரில் சென்று பார்த்து நலம் விசாரித்தார்.

### சென்னை கம்பன் கழகத்தின் சார்பில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வரவேற்புரையில்

## ‘பொலிவுமிகு பொன்விழா 51’ நிறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்!

**சென்னை, ஆக.5-**

**சென்னை கம்பன் கழகத்தின் சார்பில், ‘பொலிவுமிகு பொன் விழா நிறைவு’, ‘கம்பன் விழா-51’ ஆகிய நிகழ்வுகள் சென்னை மயிலாப்பூர் ஏ.வி.எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் வருகிற 8-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை 3 நாட்கள் நடைபெற உள்ளது. 8-ஆம் தேதி மாலை 5 மணிக்கு தொடங்கும் ‘பொலிவுமிகு பொன் விழா நிறைவு’ நிகழ்ச்சிக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்குகிறார்.**

சென்னை கம்பன் கழகத்தின் தலைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வரவேற்கிறார். தெ.ஞான சுந்தரம், சாரதா நம்பி ஆரூரன், பழ.பழநியப்பன், சுகிசிவம், இலங்கை ஜெயராஜ் ஆகியோருக்கு ‘இயற்றமிழ் அறிஞர்’ என்ற விருதி னையும், திரைப்பட பாடலாசிரியர் கவிப்பேரரசு வைரமுத்துக்கு சென்னை ஆழ்வார்கள் ஆய்வு மையம் நிறுவிய ‘கவிச் சக்கரவர்த்தி கம்பர்’ விருதையும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி பேசுகிறார். இதையடுத்து விருது பெற்றவர்களை கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்தி பேசுகிறார்.

இதேபோல தமிழ் இலக்கியத் துறைக்கு களப்பணி செய்துவரும் 19 பேருக்கும், மாநில அளவிலான இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட உள்ளன. இதனைத் தொடர்ந்து 9-ஆம் தேதியன்று, கம்பன் படைத்த ‘விருத்த சோலை யில் வியப்பு மலர்கள்’ என்ற கருப்பொருளை மையமாக கொண்டு இந்த ஆண்டு விழா தொடங்குகிறது. ‘அமிழ்தக் கம்பன் ஆய்வுரை அரங்கம்’, ‘முத்தமிழ்க் கம்பன் மொழி மாலை அரங்கம்’ என்ற தலைப்புகளில் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

### 7.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் — சர்வதேசத் தரத்தில்

# மெரினா கடற்கரைப் பகுதியில் - நீலக்கொடி சான்றிற்கான மேம்பாட்டுப் பணிகள்!

## பொதுமக்கள் பயன்பாட்டிற்கு - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஆக.5-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட மெரினா கடற்கரைப் பகுதியில் நீலக்கொடி சான்றிற்காக 7.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் சூழலியலை பேணும் மேம்பாட்டுப் பணிகளை நேற்று முன்தினம் (3.8.2025) பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

நீலக்கொடி கடற்கரைத் திட்டமானது நன்னீர் மற்றும் கடல் பகுதிகளில் நிலத்தின் தன்மையினை மேம்படுத்தும் சர்வதேச அளவிலான முயற்சியாகும். இத்திட்டம் டென்மார்க் நாட்டின் சுற்றுச்சூழல் கல்வி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

நீலக்கொடி கடற்கரை திட்டத்தின் கீழ் நீரின் தரம், சுற்றுச்சூழல் மேலாண்மை, சுற்றுச்சூழல் கல்வி, பாதுகாப்பு ஆகிய நான்கு அம்சங்களின் வாயிலாக உயர்ந்த தரங்கள் நிலை நாட்டப்படுகிறது.

நீலக்கொடி கடற்கரை சான்றிதழ் பெறுவதால், உலக அளவில் அதிக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்த்து சுற்றுலா மேம்பாட்டிற்கும், உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் வழிவகை ஏற்படுகிறது. உள்ளூரில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள சமூகங்களை ஆதரித்து கடற்கரை இடங்களை பாதுகாக்க ஊக்குவிக்கிறது. மேலும் நீலக்கொடி என்பது சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுலாத் துறைகளை ஒருங்கிணைக்க உதவும் ஒரு மதிப்புமிக்க சுற்றுச்சூழல் சின்னமாக வளர்ந்துள்ளது.

**கோவளம் கடற்கரையில் நீலக்கொடி**

இத்திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கோவளம் கடற்கரை நீலக்கொடி கடற்கரை சான்றிதழ் பெற்ற தமிழ்நாட்டின் முதல் கடற்கரையாகத் திகழ்கின்றது. முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதில் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழ்நாட்டினை மேலும் அதிக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் சென்னை, கடலூர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய கடற்கரைகளை நீலக்கொடி சான்று பெற்ற கடற்கரைகளாக விரிவுபடுத்தும் நோக்கில் சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் சூழலியலை பேணும் வகையிலான மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

இதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட மெரினா கடற்கரைப் பகுதியில் நீலக்கொடி சான்றிற்காக 20 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச தரத்தில் 7.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மூங்கில் நிழற்குடைகள்**

நீலக்கொடி கடற்கரை திட்டத்தின் கீழ் மெரினா கடற்கரையின் 20 ஏக்கர் பரப்பளவிலான இடத்தில் மூங்கிலால் ஆன 20 நிழற்குடைகள், 40 சாய்வு நாற்காலிகள், 12 அமரும் நாற்காலிகள், 4 கண்காணிப்புக் கோபுரங்கள், 24 குப்பைத் தொட்டிகள், முகப்பு வளைவு, தியான மையம், வாசிக்கும் அறை மற்றும் தன்படம் எடுக்கும் 2 இடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் தென்னை மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் 12 எண்ணிக்கையிலான சக்கர நாற்காலிகள், 4 இடங்களில் குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், தாய்மார்கள் பாலூட்டும் அறை, காட்சிப் பதிவு கண்காணிப்பு (CCTV) மற்றும் முதலுதவி அறை, இருப்பு அறை, ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியே குளியல் அறைகள், கழிப்பறைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறை, தானியங்கி இயந்திரம் மூலம் தூய்மையான குடிநீர் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் இயக்குநர் ஏ.ஆர். ராகுல் நாத், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளும்கட்சி துணைத்தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.